# பத்திரிக்கைச் செய்தி

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் வசிக்கும் டாக்டர் பி.சுகுமாரன் அவர்களின் மனைவி டாக்டர் ஏ.மோகனா அவர்கள் 04.12.2018 ஆம் தேதி மதியம் 17.15 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தின் முன்பு ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவில், ஓசூரில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் Phase 7 HIG-1/310 என்ற வீடு 06.09.2018 ஆம் தேதியன்று நடைபெற்ற குலுக்கலில் தனக்கு ஒதக்கீடு செய்யப்பட்டதாகவும், இது தொடர்பாக அந்த வீட்டின் மதிப்புத்தொகை ரூ.74,75,000/-யை முழுமையாக ஓசூர் வீட்டுவசதி வாரிய அலுவலகத்தில் செலுத்திவிட்டதாகவும், அதன்பிறகு சாவி ஒப்படைப்பதற்கான உத்தரவு வாரியத்திலிருந்து பிறப்பிக்கப்பட்டதாகவும், இது தொடர்பாக அந்த அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.எம்.சி.அண்ணாமலை அவர்களை 09.11.2018, 28.11.2018 மற்றும் 04.12.2018 ஆகிய தேதிகளில் சந்தித்து வீட்டின் சாவியை ஒப்படைக்குமாறு கேட்டபோது, அவர் தனக்கு கையூட்டாக ரூ.2,000/- தரவேண்டும் என்றும் அதன்பிறகு தான் சாவியை ஒப்படைப்பதற்கான ஏற்பாடு செய்யமுடியும் என்று சொன்னதாகவும் புகாரில் தெரிவித்து திரு.அண்ணாமலை அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியிருந்தார். அவருடைய புகார் மனுவின் பேரில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு 05.12.2018 ஆம் தேதி பொறிவைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இன்று மேற்கொள்ளப்பட்ட பொறிவைத்து பிடிக்கும் நிகழ்வின்போது, பகல் சுமார் 11.30 மணியளவில் டாக்டர் ஏ.மோகனா அவர்கள், இளநிலை உதவியாளர் திரு.எம்.சி.அண்ணாமலை அவர்களை ஓசூர் வீட்டுவசதி வாரிய அலுவலகத்தில் சந்தித்தபோது, அவரிடமிருந்து ரூ.2,000/- கையூட்டாக கேட்டு பெற்றுக் கொண்டார், அப்போது அவர் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலர்களால் கையும் களவுமாக பிடிக்கப்பட்டு பிறகு அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.